பெறுதல் நாள்: 12.09.2013

**தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர்,**
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணா சாலை,
சென்னை–600 002.

ஐயா,

பொருள்: தமிழ்நாடு மின்சார வாரிய அனைத்து தொழிற்சங்கங்களின் சார்பாக கோரிக்கை மனு அளித்தல் – தொடர்பாக.

---

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் செயல்பட்டு வரும் அனைத்து தொழிற்சங்கங்களும் 12.09.2013 அன்று கூடி விவாதித்து எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வாரியத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர் அவர்களின் கவனத்திற்கு உரிய நடவடிக்கைக்கு சமர்ப்பிக்கிறோம்.

தீர்மானங்கள்

1) 01.12.2011 முதல் வழங்க வேண்டிய ஊதிய உயர்வு தொடர்பாக வாரியம் தனது ஆலோசனையை உடனடியாக தொழிற்சங்கங்களிடையே தெரிவித்து பேச்சு வார்த்தை நடத்தி ஊதிய உயர்வை உடனடியாக வழங்கிட வேண்டும்.
2) 18.11.2009 அன்று ஏற்படுத்தப்பட்ட முத்தரப்பு ஒப்பந்தத்தில் ஒப்புக்கொண்டு நிலுவையிலுள்ள கோரிக்கைகளை உடனடியாக செயல்படுத்திடவேண்டும்.
3) வாரியத்தில் பல்வேறு அன்றாட பணிகளை வெளியாருக்கு (out sourcing) ஒப்படைப்பதை உடனடியாக கைவிடவும், ஏற்கனவே வெளியாருக்கு வழங்கப்பட்ட பணிகளை ரத்து செய்திடவும், இனி வரும் காலங்களில் வாரியப்பணிகளை வெளியாருக்கு விடாமல் வாரியப் பணியாளர்களை கொண்டு செயல்படுத்திட வேண்டும்.

மேற்கூறிய தீர்மானங்கள் மீது வாரியத்தலைவர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு விரைந்து செயல்படுத்திட வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.

தங்கள் உண்மையுள்ள,

| | | |
|---|---|---|
| பொதுச் செயலாளர் | பொதுச் செயலாளர் | பொதுச் செயலாளர் |
| த.நா.மி.தொழிலாளர் சம்மேளனம் | தமிழ்நாடு மின்கழகத் தொ.மு.ச. | தி.மி.ஊ.மத்திய அமைப்பு |


www.tnebes.org

செயலாளர்
மி.பி.அண்ணா தொழிற் சங்கம்

பொதுச் செயலாளர்
த.மி.ஜனதா தொழிலாளர் சங்கம்

பொதுச் செயலாளர்
த.தே.மின் தொழிலாளர் சம்மேளனம்

பொதுச் செயலாளர்
த.மி.பொறியாளர் சங்கம்

பொதுச் செயலாளர்
த.மி.ஊழியர் காங்கிரஸ்

பொதுச் செயலாளர்
த.மி.தொ.ஐக்கிய சங்கம்

பொதுச் செயலாளர்
த.மி.பொறியாளர் கழகம்

பொதுச் செயலாளர்
த.மி.நி.க.அலுவலர் சங்கம்

பொதுச் செயலாளர்
பா.மி.தொழிலாளர் சம்மேளனம்

பொதுச் செயலாளர்
த.மி.அட்டை பட்டியல் பணியாளர் சங்கம்

பொதுச் செயலாளர்
த.மி.டாக்டர் அம்பேத்கார் எம்ப்ளாயீஸ் யூனியன்



www.tnebes.org